செ.வெ.எண்.43 நாள்:21.10.2020

நீலகிரி மாவட்டத்தில் தசைசிதைவு நோய் பக்க வாதம் மற்றும; முதுகுதண்டு வடம் பாதிக்கப்பட்டு இரண்டு கால்கள் செயல் இழந்து இரண்டு கைகளும் நல்லநிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மின்கலத்தால் இயங்கும் சிறப்பு சக்கரநாற்காலிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற விண்ணப்பிக்கலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.. அவர்கள் தகவல்.

---

தமிழக அரசு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் தசைசிதைவு நோய் பக்க வாதம் மற்றும; முதுகுதண்டு வடம் பாதிக்கப்பட்டு இரண்டு கால்கள் செயல் இழந்து இரண்டு கைகளும் நல்லநிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மின்கலத்தால் இயங்கும் சிறப்பு சக்கரநாற்காலிகள் வழங்கும் திட்டத்தினை மாற்றுத்திறனாளிகள் பயன் பெறும் வகையில் மின்கலத்தால் இயங்கும் சக்கரநாற்காலிகள் நீலகிரி மாவட்டத்திற்கு அரசிடமிருந்து ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டதின் கீழ் பயன் பெற மேற்கண்ட தசைசிதைவு நோய் பக்க வாதம் மற்றும; முதுகுதண்டு வடம் பாதிக்கப்பட்டு இரண்டு கால்கள் செயல் இழந்து இரண்டு கைகளும் நல்லநிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கீழ்கண்ட ஆவணங்களுடன் 1) மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் 2) குடும்ப அட்டை நகல் 3) ஆதார் அட்டை நகல் 4) பாஸ்போர்ட் அளவு புகைப்படம்-2 நகல்கள் ஆகியவற்றுடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், கார்டன் சாலை, உதகமண்டலம் என்ற முகவரியில் செயல்பட்டு வரும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.தகுதியான மாற்றுத்திறனாளிகள் முறையாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும், மேலும் விவரங்களுக்கு 0423-2440725 என்ற அலுவலக தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு பயன் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.